


திருவண்ணாமலை மாநகரில் அண்ணாமலையார் மலைஅடிவாரகுடியிருப்போர் நலச்சங்க ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. ஆலோசனைக் கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் ஆலோசனைகள் வழங்கினார். உடன் நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, மாநகரமேயர் நிர்மலாவேல்மாறன், ப.கார்த்திவேல்மாறன், எஸ்.பன்னீர்செல்வம், பிரியாவிஜயரங்கன், சு.ராஜாங்கம், வழக்கறிஞர்கள் அருள்குமரன், லையா இரா.கார்த்திகேயன் உட்படபலர் உள்ளனர்.




விழுப்புரம் தெற்கு மாவட்ட செயலாளரும், தமிழ்நாடு கைப்பந்து விளையாட்டு தலைவருமான டாக்டர் பொன்.கௌதமசிகாமணி சென்னை மேயர் ராதாகிருஷ்ணன் விளையாட்டு அரங்கில் நடைபெற்ற மாநில அளவில் ஆண்களுக்கான கல்லூரி அளவிலான Dawn To Dusk கைப்பந்து சாம்பியன்ஷிப் இறுதி போட்டியை துவக்கி வைத்து வெற்றி பெற்ற வீரர்களுக்கு பரிசுகளை வழங்கினார்.

### சட்டப்பேரவையில் வைத்த கொள்கை விளக்கக் குறிப்பில்
### பெரியார் – அம்பேத்கர் – நேரு பெயர்களை நீக்கி துணிச்சல்

# சமூக நீதி வரலாற்றையே இருட்டடிப்பு செய்திருக்கிறார் முதல்வர் விஜய்!

### மானம், ரோஷம் இன்றி பஜனை மடமாகிவிட்ட சத்தியமூர்த்திபவன்!
### கழக சட்டத்துறை இணைச் செயலாளர் இ.பரந்தாமன் கடும் தாக்கு!

சென்னை, ஆக.31–

**கொள்கை விளக்க குறிப்பில் பெரியார், அம்பேத்கர், நேரு பெயர்களை நீக்க எங்கிருந்து துணிச்சல் வந்தது? சமூக நீதி வரலாற்றையே இருட்டடிப்பு செய்திருக்கிறார் முதல்வர் விஜய். சமூக நீதியின் வேர்களையே வெட்டத் துணிந்திருக்கிறார்கள். பெரியாரையும் அம்பேத்கரையும் வெறும் பிராண்ட் அம்பாசிடர்களாக மட்டுமே பயன்படுத்துகிறது தவெக. காங்கிரஸுக்கு மானம், ரோஷம், சொரனை இல்லையா? பஜனை மடமாகிவிட்ட சத்தியமூர்த்தி பவனை விஜய்பவன் என மாற்றிக் கொள்ளுங்கள். காங்கிரஸுடன் கூட்டணி வைத்துக் கொண்டே பா.ஜ.க.வின் நிழல் ஆட்சியை நடத்துறது விஜய் அரசு என தி.மு.க. சட்டத்துறை இணைச் செயலாளரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான இ.பரந்தாமன் சரமாரியாக குற்றம்சாட்டியுள்ளார்.**

அவரது அறிக்கை வருமாறு:-

தந்தைப் பெரியார், புரட்சியாளர் அம்பேத்கர், ஜவகர்லால் நேரு ஆகியோருக்கு மிகப் பெரிய அவமரியாதை செய்துவிட்டது விஜய் அரசு. பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மானிய கோரிக்கை கொள்கை விளக்க குறிப்பில் இருந்து பெரியார், அம்பேத்கர், ஜவகர்லால் நேரு ஆகியோரின் பெயர்கள் நீக்கப்பட்டிருக்கின்றன.

ஒட்டுமொத்த சமூக நீதிப் போராளிகளையும் கொதித்தெழச் செய்திருக்கிறது. தமிழ்நாட்டின் இடஒதுக்கீடு மற்றும் சமூக நீதி வரலாற்றுப் பக்கங்களில் இருந்து பெரியார், அம்பேத்கர், ஜவஹர்லால் நேரு ஆகியோரின் பெயர்கள் நீக்கப்பட்டிருப்பதை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

மானிய கோரிக்கைகளின் போது துறையின் அமைச்சர்களால் சட்டமன்றத்தில் வைக்கப்படும் முக்கிய ஆவணம் கொள்கை விளக்க குறிப்புகள். ஒவ்வொரு துறை மானிய கோரிக்கை விவாதம் தொடங்கும் முன்பு துறை அமைச்சர்கள், 'கொள்கை விளக்க குறிப்பை படித்ததாக அவை நடவடிக்கை குறிப்பில் பதிவு செய்து கொள்ளுங்கள்' என சொல்லுவார்கள். அதன்படி அவை சட்டமன்ற நடவடிக்கை குறிப்பிலும் பதிவு செய்யப்படும்.

**திட்டமிட்டே பெயர்கள் நீக்கம்!**

சட்டப்பேரவையில் அமைச்சர் சம்பத் குமார் அவர்கள் படித்த பிற்படுத்தப்பட்டோர் மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை கொள்கை விளக்கக் குறிப்பில், 'இடஒதுக்கீடு' என்ற பத்தியில் பெரியார், அம்பேத்கர், ஜவகர்லால் நேரு ஆகியோரின் பெயர்களை திட்டமிட்டே நீக்கியிருக்கிறார்கள். முந்தைய திராவிட மாடல் ஆட்சியில் கொள்கை விளக்க குறிப்பில் இடம்பெற்ற இவர்களின் பெயர்களை நீக்குவதற்கு எங்கிருந்து துணிச்சல் வந்தது? மைனாரிட்டி அரசாக இருந்து கொண்டு, கூட்டணி அரசின் தயவில் ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கும் போதே இந்த அத்துமீறலை செய்திருக்கிறார்கள்.



திராவிட மாடல் ஆட்சியில் கடந்த ஆண்டு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் அவர்கள் சட்டமன்றத்தில் தாக்கல் செய்த கொள்கை விளக்கக் குறிப்பில் இடஒதுக்கீடு பற்றி குறிப்பிடும் போது, '1951இட ஒதுக்கீடு தொடர்பாக வெளியிடப்பட்டிருந்த வகுப்புவாரி பிரதிநிதித்துவ அரசாணை உச்ச நீதிமன்றத்தால் ரத்து செய்யப்பட்டது. இதனை எதிர்த்து பெரியார் தமிழ்நாட்டில் வழி நடத்திய எதிர்ப்பு ஊர்வலங்கள் மற்றும் கண்டனக் கூட்டங்களின் விளைவாக அரசமைப்புச் சட்டத்தில் முதல் திருத்தத்தில் பிரிவு 15(4) சேர்க்கப்பட காரணமாக அமைந்தது. பிரதமர் ஜவஹர்லால் நேரு மற்றும் சட்ட அமைச்சர் அம்பேத்கர் ஆகியோர் முன்னெடுத்து இந்த முதல் அரசமைப்புச் சட்டத் திருத்தத்திற்கு வழி வகுத்தனர்' என குறிப்பிட்டிருந்தார்.

**திராவிட மாடல் அரசின் திட்டப் பெயர்களும் நீக்கம்!**

இந்த முக்கியமான பகுதியை விஜய் அரசு முற்றிலும் நீக்கிவிட்டது. கடந்த ஆண்டு மட்டுமல்ல, அதற்கு முந்தைய ஆண்டுகளிலும் இந்த பகுதியை கொள்கை விளக்க குறிப்பில் திராவிட மாடல் அரசு குறிப்பிட்டு வந்திருக்கிறது. திராவிட மாடல் ஆட்சியின் திட்டப் பெயர்களை நீக்குவது போல, பெரியார், அம்பேத்கர், ஜவகர்லால் நேரு ஆகியோரின் பெயர்களையும் நீக்கிவிட்டார்கள்.

எங்கள் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சியில் கொள்கை விளக்கக் குறிப்பில் இடம் பெற்றிருந்த பெரியார், அம்பேத்கர், ஜவகர்லால் நேரு மட்டுமல்ல, இடஒதுக்கீட்டு வரலாற்றையும் சுருக்கிவிட்டது விஜய் அரசு. நீதிக்கட்சி குறித்த குறிப்புகள், வகுப்புவாரிய பிரதிநிதித்துவ அரசாணை, பெரியாரின் போராட்டங்கள், இடஒதுக்கீடு கொள்கை, இடஒதுக்கீடு வரலாறு, மண்டல் கமிஷன், ஒன்றிய அரசுப் பணி மற்றும் கல்வி நிலையங்களில் மாணவர்கள் சேர்க்கையில் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27 விழுக்காடு இடஒதுக்கீடு பற்றியெல்லாம் தற்போதைய கொள்கை விளக்க குறிப்பு ஆவணத்தில் திட்டமிட்டுத் தவிர்க்கப்பட்டிருப்பது அதிர்ச்சியையும் வேதனையையும் ஏற்படுத்தியிருக்கிறது.

தமிழ்நாட்டின் உயிர் நாடியான சமூக நீதி வரலாற்றையே இருட்டடிப்பு செய்திருக்கிறார் முதல்வர் விஜய். சமூக நீதியின் தொட்டிலாகவும், ஒடுக்கப்பட்டோரின் குரலாகவும் விளங்கும் தமிழ்நாட்டில், இடஒதுக்கீட்டுப் போராட்டத்தின் பேராசான்களாக விளங்கிய தலைவர்களின் பெயர்களை அதிகாரப்பூர்வ அரசு ஆவணங்களில் இருந்து மறைப்பது வரலாற்றுத் துரோகம்.

**சமூக நீதித் தலைவர்களை அவமதிக்கும் த.வெ.க. அரசு!**

திராவிட மாடல் ஆட்சியில் இருந்த நீதிக்கட்சி மற்றும் சமூக நீதித் தலைவர்களின் பங்களிப்புகள், தவெக ஆட்சியில் முற்றிலுமாகத் துடைத்தெறியப்பட்டிருப்பது தற்செயல் அல்ல. இது அதிகார வர்க்கத்தின் திட்டமிட்ட சதி வேலை! நிச்சயமாக இது உள் நோக்கம் கொண்ட செயல்பாடாகவே தெரிகிறது. ஒவ்வொரு ஆண்டும் கொள்கை விளக்க குறிப்பை தயாரிக்கும் போது முந்தைய ஆண்டு கொள்கை விளக்க குறிப்பேட்டில் இருந்துதான் எழுதப்படும். அதில் உள்ள அடிப்படை தகவல்களை மாற்ற மாட்டார்கள். புதிதாக அப்டேட் மட்டுமே சேர்க்கப்படும். இந்த முறையை மாற்றியிருப்பதால் தான் உள்நோக்கம் கொண்டது என கருத வேண்டியிருக்கிறது. சமூக நீதியின் வேர்களையே வெட்டத் துணிந்திருக்கிறார்கள்.

தவெகவின் ஐந்து கொள்கைத் தலைவர்களாக பெரியார், அம்பேத்கர், காமராஜர், வேலுநாச்சியார், அஞ்சலை அம்மாள் ஆகியோர் குறிப்பிடப்படுகிறார்கள். பெரியார், அம்பேத்கர் ஆகியோருக்கு முதல்வர் விஜய் கொடுக்கும் மரியாதை இவ்வளவுதானா? மேடையில் முழங்க பெரியாரும் அம்பேத்கரும் வேண்டும். ஆனால், அவர்களின் இடஒதுக்கீட்டு தியாகம் மட்டும் வேண்டாமா? பெரியாரையும் அம்பேத்கரையும் கட்சிக்கு வெறும் பிராண்ட் அம்பாசிடர்களாக மட்டுமே பயன்படுத்துகிறீர்களா? உங்களின் இரட்டை வேடம், ஆட்சிக்கு வந்த பிறகு கிழிந்து தொங்குகிறது. 'கொள்கைத் தலைவர்களின் கொள்கை தான் எங்கள் மூச்சு. சமத்துவமே எங்கள் பாதை. பிறப்பொக்கும் எல்லோருக்கும்' என்றெல்லாம் மேடைகளில் முழங்கியது வெற்று முழக்கமா? வாக்கு வங்கிக்கு ஒரு முகம் கொள்கைக்கு ஒரு முகமா?

**சட்டமன்றத்தை சினிமா தியேட்டராக்குகிறார்கள்!**


சட்டமன்றத்தில் சினிமா பாட்டு பாடத் தெரிந்த அமைச்சர் சம்பத்குமாருக்கு கொள்கை விளக்க குறிப்பில் தலைவர்கள் பெயரை நீக்கப்பட்டதை எல்லாம் பார்க்க நேரமில்லையா? கோலிவுட் உலகத்தை விட்டு அவர் இன்னும் வரவில்லை. தியேட்டரை விட்டு சட்டமன்றத்திற்கு வந்திருக்கிறோம் என்பதுகூட தெரியாமல் இருக்கிறார் மந்திரி.

பிரதமர் நேருவின் ஆட்சியில் கொண்டு வரப்பட்ட முதலாவது அரசியலமைப்புச் சட்டத் திருத்தமும், அதற்குப் பின்னால் இருந்த பெரியார், அம்பேத்கரின் சமரசமற்ற சமூக நீதிப் போராட்டங்களும்தான் இன்று தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்டோர் அனுபவிக்கும் 69 % இடஒதுக்கீட்டின் அடித்தளம். அந்த வரலாற்றையே கிழித்தெறிய முற்படுகிறது தவெக அரசு. நேரு பெயரை நீக்கியிருக்கிறார்களே... காங்கிரஸ் கட்சிக்கு மானம், ரோஷம், சொரனை இல்லையா? 'விஜய் போற்றி' பாடும் பஜனை மடமாகிவிட்ட சத்தியமூர்த்தி பவனை விஜய்பவன் என மாற்றிக் கொள்ளுங்கள். கதர் கிழிஞ்சா தைக்க முடியாது காங்கிரஸ்காரனை திருத்த முடியாது! காங்கிரஸுடன் கூட்டணி வைத்துக் கொண்டே பாஜகவின் நிழல் ஆட்சியை நடத்தி கொண்டிருக்கிறது விஜய் அரசு.

**தலைவர்கள் பெயர் இடம்பெற வேண்டும்!**

பெரியார், அம்பேத்கர், ஜவகர்லால் நேரு ஆகியோரின் பெயர்களை மீண்டும் சேர்த்து திருத்தப்பட்ட கொள்கை விளக்கக் குறிப்பேட்டை உடனடியாக வெளியிட வேண்டும் என வலியுறுத்துகிறோம்.

இவ்வாறு இ.பரந்தாமன் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



தூத்துக்குடி வடக்கு மாவட்ட சுற்றுசூழல் அணி துணை அமைப்பாளர் முத்துராமன் இல்ல திருமணவிழாவில் தூத்துக்குடி வடக்கு மாவட்ட கழக செயலாளர் முன்னாள் அமைச்சர் பி.கீதாஜீவன் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். உடன் தூத்துக்குடி மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ஆனந்தசேகரன், மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### அரசியல் காழ்ப்புணர்ச்சியால்

# தி.மு.கழகத் தலைவர் மு.க.ஸ்டாலினின் பாதுகாப்பைக் குறைப்பதா?

### தமீமுன் அன்சாரி எம்,எல்,ஏ, கண்டனம்!



*சென்னை,ஆக.31-*

*"அரசியல் காழ்ப்புணர்ச்சியால் தி.மு.கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பாதுகாப்பை குறைப்பதா?" என்று தமீமுன் அன்சாரி எம்.எல்.ஏ. கண்டனம் தெரிவித்துள்ளார்.*

*இதுகுறித்து அவர் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:-*

*முன்னாள் முதல்வரும், திமுகவின் தலைவருமான அண்ணன் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு கொடுத்து வந்த உயர் பாதுகாப்பை தமிழ்நாடு அரசு குறைத்தது ஆச்சரியம் அளிக்கிறது. இது போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வது காழ்ப்புணர்ச்சி அரசியலின் வெளிப்பாடாகவே கருதப்படும்.*

*இவ்வாறு அவர் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.*



பொதுமக்களை சந்தித்து அவர்களின் அடிப்படை தேவைகள் குறித்து விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜீ.வி. மார்கண்டேயன் மனுக்களை பெற்றுக் கொண்டார்.உடன் ஒன்றிய செயலாளர்கள் அன்புராஜன், இம்மானுவேல், செல்வராஜ் மும்மூர்த்தி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.